செய்தி வெளியீடு எண்: 38 நாள்: 20.09.2019

**தேனி மாவட்டம்,**
**டெங்கு மற்றும் இதர காய்ச்சல் தொடர்பான ஆலோசனைக்கூட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**தலைமையில் நடைபெற்றது:-**

******

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், டெங்கு மற்றும் இதர காய்ச்சல் தொடர்பாக, சுகாதாரத்துறை, உள்ளாட்சித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, கல்வித்துறை மற்றும் இதரத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (19.09.2019) நேற்று நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ளதால், பொதுமக்களுக்கு உள்ளாட்சி நிர்வாகத்தின் சார்பில் வழங்கப்படுகின்ற குடிநீரில் அரசால் நிர்ணைக்கப்பட்டுள்ள அளவு குளோரினை கலந்து வழங்கிட வேண்டும். பொது இடங்கள், பள்ளி, கல்லூரிகள், வணிக வளாகங்கள், அரசு அலுவலகங்கள், தெருக்கள், சாலைப்பகுதிகளில் தண்ணீர் தேங்கா வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதோடு, தேவையற்ற பொருட்கள் மற்றும் குப்பைகளை தினந்தோறும் அப்புறப்படுத்தி, உள்ளாட்சி நிர்வாகத்தில் உள்ள புகை போக்கி கொண்டு தினந்தோறும் தெருக்கள் மற்றும் குடியிருப்புகளில் புகை அடிக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், டெங்கு காய்ச்சல் ஏ.டி.எஸ். என்ற பெண் கொசு மூலம் மனிதர்களுக்கு பரவுகிறது. ஏ.டி.எஸ். கொசு மனிதர்களை பகல் நேரத்தில் மட்டுமே கடித்து டெங்கு காய்ச்சலை பரப்புகிறது. டெங்கு காய்ச்சல் பாதித்த நபரை கடித்த கொசு, டெங்கு பாதிப்பில்லாதவரை கடிக்கும் பொழுது டெங்கு காய்ச்சலை பரப்புகிறது. தண்ணீர் மற்றும் காற்று மூலம் டெங்கு காய்ச்சல் பரவாது. டெங்கு பாதித்தவரின் இருமல், தும்மல் மற்றும் எச்சில் ஆகியவை மூலம் டெங்கு காய்ச்சல் மற்றவர்களுக்கு பரவாது. டெங்கு காய்ச்சல் ஏற்பட்டால் உடலில் 104 டிகிரி பாரன்ஹீட் வரை வெப்பநிலை உயரும். டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் - தலைவலி, தசைவலி, கண்வலி, உடலில் அரிப்பு, மூட்டுவலி மற்றும் வாந்தி ஏற்படும். டெங்கு காய்ச்சல் அறியப்பட்டால் முறையான மருத்துவ சிகிச்சை மூலம் சாதரணமாக ஏழு நாட்களுக்குள் குணமாகும்.

காய்ச்சல் நீடித்தால் இரத்தப் பரிசோதனை மேற்கொண்டு, உரிய மருத்துவ ஆலோசனையின் பேரில் மருந்துகள் உட்கொள்ள வேண்டும். டெங்கு காய்ச்சல் வந்தால் சுயமாக மருந்து உட்கொள்ளக் கூடாது, உடனடியாக அருகில் உள்ள ஆரம்ப சுகாதார மருத்துவமனையை அணுகி மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளவேண்டும். டெங்கு காய்ச்சல் ஏற்பட்டால் உடலில் நீர் சத்து குறைந்து விடும். உடலில் நீர் இழப்பை தடுப்பதற்கு பால், இளநீர், கஞ்சி, உப்பு-சர்க்கரை கரைசல், மற்றும் ஆரஞ்சுப் பழச்சாறு ஆகிய திரவ பொருட்களை உட்கொள்ள வேண்டும். தேங்கிய நல்ல நீர் மற்றும் மழைநீர் போன்றவற்றில் மட்டுமே டெங்கு கொசு உற்பத்தியாகும். டெங்கு கொசு வளர வாய்ப்பு இல்லாதவாறு பொதுமக்கள் சுற்றுச்சுழலை சுத்தமாக பராமரிக்க அறிவுறுத்திட வேண்டும்.

*மேலும், டெங்கு தொடர்பான குறும்படங்களை கொண்டு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மின்னணு திரை வாகனம், உள்ளூர் தொலைக்காட்சி, தினசரி நாளிதழ்கள் மற்றும் ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். மருத்துவமனை உள்புறம் மற்றும் வெளிப்புறப்பகுதிகள், கடந்த ஆண்டு டெங்கு பாதிப்புக்குள்ளான பகுதிகள், கட்டுமான பணிகள் நடைபெறும் பணித்தளங்கள், இரயில்வே யார்டுகள், வாகனங்கள் கைப்பற்றப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கும் காவல் நிலையங்கள், பயன்பாடு மற்றும் குப்பை பொருட்கள் சேகரித்து வைத்திருக்கும் இடங்கள் ஆகிய பகுதிகளை கூடுதலாக கவனம் செலுத்தி தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே, நமது மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலை முற்றிலுமாக தடுப்பதற்கு போர்கால அடிப்படையில் அனைத்துத்துறை அலுவலர்கள் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் என தெரிவித்தார்.*

*கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில், குடிநீரில் குளோரின் அளவு சரியாக உள்ளதா என்பது குறித்த செயல்முறை விளக்கம் துறை அலுவலர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.*

*இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ச.கந்தசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, உத்தமபாளையம் சார் ஆட்சியர் டாக்டர் ஆர்.வைத்திநாதன், இ.ஆ.ப., இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) மரு.சரஸ்வதி, உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆர்.பாலசந்தர், இ.ஆ.ப., பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் ச.ஜெயப்பிரித்தா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு. வரதராஜன், மாவட்ட வழங்கல் அலுவலர் இ.கார்த்திகேயினி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மு.சாந்தி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மு.சாந்தி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சகுந்தலா, அனைத்து வட்டாட்சியர்கள், நகராட்சி ஆணையாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், செயல் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***